# தமிழரும் உழவும்

***முனைவர் செ. பொன்மலர்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம்
கன்னியாகுமரி மாவட்டம்

**மலர்: 4**

**இதழ்: 2**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2019**

**ISSN: 2454-3993**

## முன்னுரை

இயற்கையாக கிடைத்த காய் கனி கிழங்குகளை உண்ட மனிதன் மண்ணின் மகத்துவத்தை உணர்ந்து வாழ்வை வளப்படுத்தும் வகையில் உழவுத் தொழிலை மேற்கொண்டான். உழவு செய்யும் நிலத்தைத் தெய்வமாகக் கருதினான். வேட்டைச் சமூகமாக இருந்த மனிதன், நாகரிகம் அடைவதற்கு அடிப்படைக் காரணம் உழவுத் தொழிலாகும். எனவேதான் உழவுத் தொழில் தலைமைத் தொழிலாகவும் காணப்பட்டது. இதனைத் திருவள்ளுவர்,

**சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை** ***(குறள் 1031)***

என்று குறிப்பிடுகிறார்.

## உழவுத் தொழில் (பயிர்த் தொழில்)

சங்க இலக்கியத்தில் உழவுத் தொழில் செய்யும் நிலப்பகுதியை மருதம் என்று பாகுபடுத்தி உள்ளனர். இம்மக்கள் நெல், திணைப்பயிர், வரகு, உழுந்து, கொள், பயறு, எள், அவரை, பருத்தி, கரும்பு, மஞ்சள், போன்ற பல்வேறுப் பயிர்களைப் பயிரிட்டுள்ளனர் என்பதற்குக் குறிப்புகள் காணப்படுகின்றன. உழவுத் தொழில் உழுதல், நீர் பாய்ச்சுதல், சேறு செய்தல், விதை விதைத்தல், நாற்று நடுதல், உரமிடுதல், பயிரினைக் காத்தல், களை கட்டல், அறுவடை செய்தல், போரடித்தல், குவித்தல், பதப்படுத்துதல், என்று பல கூறுகளைக் கொண்டதாகும். ஒவ்வொரு கூறுகளையும் செய்வதற்குப் பழந்தமிழர்கள் எளிமையான கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

## தளம்பு

நிலத்தை மட்டப்படுத்த தளம்பு என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். அதாவது தற்போது நிலத்தை மட்டப்படுத்துவது மரமடிப்பதை போன்றது.

நிலத்தைப் பலமுறை உழுதபின்பு வயலில் மேடு பள்ளங்கள் காணப்படும். அதனைச் சமப்படுத்தினால்தான் நீர் பாய்ச்சுவதற்கு வசதியாக இருக்கும். எனவே தளம்பு என்ற கருவியினால் மட்டப்படுத்தியுள்ளனர். இதனை,

**மலங்குமிளிர் செறுவின் தளம்பு தடித்திட்ட**

**(புறம். 61.3)**

என்ற பாடல்வரி மூலம் அறியலாம். தற்போது மட்டப்பலகையினைக் கொண்டு மட்டப்படுத்துவது மொழுக்குமரம் என்றும், மட்டப் பலகையின் மீது ஏறி நின்று மட்டப்படுத்துவதைப் படுமரம் என்றும் கூறுவர். மட்டப் பலகையினை மரம் என்று கூறுவர். மரத்தினை மாடு இணைக்கப்பட்டிருக்கும் நுகத்தில் இணைக்க வள்ளாக்கைப் பயன்படுத்துகின்றனர். இது மரத்தினால் ஆன கம்பு ஆகும். மட்டப்பலகை மரத்தினையும் வள்ளக்கையும் குறுங்கானம் கொண்டு இணைக்கின்றனர். இஃது இரும்பு அல்லது பனை நார்களால் ஆனவை என்று மரம் அடிக்கும் நிகழ்வை ரெஜித்குமார் குறிப்பிட்டுள்ளர்.

### பாதுகாத்தல்

பண்டையத் தமிழர்கள் விளைநிலங்களைக் கண்ணெனப் பாதுகாத்துள்ளனர். இப்பாதுகாப்பைத் தினைப்புனம் காத்தல் என்பர். விலங்குகள் மற்றும் பறவைகள் போன்றவற்றிலிருந்து பயிரைப் பாதுகாத்துக் கொள்ள பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவற்றுள் குளிர், தட்டை, தழல், கணை, ஞெகிழி, அடார், வேலிகள் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

### தழல்

தினைப் புனத்திலுள்ள பறவைகளை அல்லது கிளிகளை விரட்டும் கருவிகளைக் கிளிக்கடி கருவிகள் எனப்பட்டன. தழல், குளிர், தட்டை, போன்ற கருவிகளைப் பழந்தமிழர்கள் கிளிக்கடி கருவிகளாகப் பயன்படுத்தியுள்ளனர். தழல் என்பது சுற்றுவதினால் ஓசை உண்டாக்கும் கருவியாகும். பிரம்பு அல்லது குரல்கொடியினால் இதனைப் பின்னுவர் . இதனை,

**தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்**
**அழல் ஏர் செயலை அம்தலை அசை இயும்**
**குறமகள் காக்கும் ஏனல் (அகம் 188)**

என்ற பாடல் மூலம் அறியலாம். தழல் என்பதற்கு நச்சினார்க்கினியர். சுற்றன காலத்துத் தன்னிடைத்துத் தோன்றும் ஓசையால் கிளிகளை விரட்டும் கருவி என்று உரை கூறியுள்ளார்

### தட்டை

தட்டையானது தட்டப்படுவதினால் அப்பெயர் பெற்றது இது மூங்கிலைக் கொண்டு செய்யப்படும் கருவியாகும். மூங்கிலைக் கண்ணுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாறு பிளந்து ஓசை உண்டாக ஒன்றில் தட்டப்படுவதாகும். இது தட்டையைத் தட்டுவதால் உண்டாகும் ஒலி (குறுந் 193 2) போன்றிருந்ததாகக் குறுந்தொகைப்பாடல் குறிப்பிடுகின்றது.

### கணை

கணை என்பதற்கு திரண்ட வடிவு வளைதடி எனக் கழகத்தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. தினைப் புனங்களுக்குள் விலங்குகள் புகுந்து பயிரைக் கவர்ந்துண்பதுண்டு. அப்போது அவற்றைக் கணை எய்து விரட்டுவார்கள். யானை போன்ற பெரிய விலங்குகளைக் கொள்ளிக் கட்டையினால் விரட்டுவார்கள். கொள்ளிக்கட்டை என்பது பகுதி எரிந்த விறகு கட்டையாகும். இக்கொள்ளிக் கட்டை ஞெகிழி என்றச் சொல்லால் குறிக்கப்படுகிறது. இதனை,

**ஒளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்**
**களிரென ஆர்ப்பவர் ஏனல் காவலரே**

**(அகம் 73)**

**பிடிக்கை அமைந்த கன்வாய்க் கொள்ளி**
**விடுபொறிச் சுடரின் மின்னி**

**(அகம் 73.)**

என்ற பாடல்வரிகள் மூலம் அறியலாம்.

### அடார் (பொறி)

பழந்தமிழர்கள் பன்றி போன்ற விலங்குகளைப் பிடிக்க அடார் என்ற பொறியினைப் பயன்படுத்தியுள்ளனர். பெரிய கற்பலகையை ஒரு பக்கம் சாய்வாக முட்டுக்கொடுத்து உள்ளுக்குள் உணவு வைக்க அவ்வுணவை விலங்குகள் தொட மூடிக் கொள்ளும் கருவி அடார் எனப்பட்டது . இதனை,

**சிறு பொறி மாட்டிய பெருங்கல் அடார்**

**(நற் 119.2)**

என்ற பாடல்வரி உணர்த்துகின்றது.

### அறுவடை செய்தல்

பயிர் நன்கு விளைந்தவுடன் அதனை அறுவடை செய்கின்றனர். அறுவடை முதலில் இரவிலும் தற்காலத்தில் காலைப் பொழுதிலும் நடைபெறுகிறது. சங்க காலத்தில் இரவு நேரத்தில் அறுவடை செய்வதற்கு முன் தண்ணுமை என்னும் பறை. அடிக்கப்பட்டு பறவைகள் வெளியே சென்றவுடன் சிறிய அரிவாள் கொண்டு அறுவடைசெய்தனர்.

### தண்ணுமை (பறை)

பழந்தமிழர்கள் இரவு நேரத்தில் அறுவடை செய்யும்போது பயிர்களின் இடையே இருக்கும் விலங்குகள் மற்றும் கூடுகட்டி இருக்கும் பறவைகளை விரட்டுவதற்குத் தண்ணுமை அல்லது தொண்டகப் பறையினைப் பயன்படுத்தி உள்ளனர். இதனை,

**வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்**
**பழனப் பல்புள் இரிய கழனி (நற் 350)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

மேலும்,

**சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்**
**திரவரி வாரின் தொண்டகப் பறை**
**பானாள் யாமத்து கறங்கும்**
**யாமங் காவலர் அவியா மாறே**

**(குறுந் 375)**

என்னும் பாடல் வரிகள் மூலமாகவும் அறிந்துகொள்ள முடிகிறது.

### அரிவாள்

விளைந்த பயிர்களை அதன் தாளுடன் (அடிப்பகுதியோடு) சேர்த்து வளைந்த சிறிய அரிவாளைக்கொண்டு அறுக்கின்றனர். இவ்அரிவாளைக் குயம்வாள் என்று கூறுவதை,

**நெல்லரி தொழுவர் கூர்வாள் (புறம் 379.3)**

என்ற பாடலடி மூலம் அறியலாம். நெல்லரியும் கருவியைக் கூர்தீட்டுவதற்கு வயலிலிருந்த கிடந்த ஆமையின் முதுகைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

**அன்னல் யாமைக் கூன்புறத்து உரிஞ்சும்**

**(புறம் 379 .5)**

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

### தம்படித்தல் (சூடடித்தல்)

அறுவடை செய்த நெற்கதிர்களிலிருந்து நெல்லைப் பிரித்து எடுப்பதற்குத் தம்படிக்கின்றனர். நெற்கதிர்களைப் பாறைகளின் மீது பரப்பி அதன் மீது எருது அல்லது யானைகளைக்கொண்டு மிதிக்க வைப்பதாகும். இதனை,

**மென் தினை நெடும் போர் புரிமார்**
**துஞ்சு களிறு எடப்பும் தம் பெருங்கல்நாட்டே**

**(நற் 125)**

என்ற பாடலின் மூலம் அறியலாம். நெற் கதிர்களை எருது அல்லது யானைகள் மிதிக்கும்போது நெல் கீழே உதிர்ந்து விழுகின்றது. அதன்பிறகு மேலே உள்ள வைக்கோலைத் தனியே பிரித்து எடுக்கின்றனர். இவ்வாறு பிரித்தெடுத்த தானியத்தைப் பாறைகளில்

அல்லது மான் தோலில் பரப்பி உலர வைத்துப் பக்குவப்படுத்துகின்றனர் என்ற நிலைபாடு காணப்படுகிறது. நெல்லைப் பிரித்தெடுப்பதற்கு விலங்குகள் பயன்படுத்தப்பட்டதைக் கடாவிடுதல் என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இதனை,

**குன்று கண்டு அன்ன நிலைப்பல்போர்பு**
**நாள்கடா அழித்த நனந்தலைக்குப்பை**
**(புறம்- 353)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.



## குதிர், தொடுகூடு

பாறைகளில் நன்கு உலரவைத்த தானியங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு தொடுகூடு மற்றும் குதிர் போன்றவற்றைப பயன்படுத்தி உள்ளனர்.இவைகள் மரம் மற்றும் சுடுமண்ணினால் செய்யப்பட்டுள்ளன. இதனை

**கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்**
**மிகுபதம் நிறைந்த தொடு கூட்டு ஒருசிறை**
**(அகம் 167)**

என்ற பாடல் மூலம் அறியமுடிகிறது. தற்போதும் நாட்டுப்புற மக்கள் தானியங்களை மரத்தினாலானப் பத்தாயத்திலும் சுடு மண்ணால் செய்த பெரிய கூனிப்பானைகளிலும் பாதுகாத்து வைக்கின்றனர். இவை முன்னோர்கள் விட்டுச் சென்ற எச்சங்களாகவே இன்றும் காணப்படுகின்றன.

## பயிர் சுழற்சிமுறை

அறுவடை செய்யப்பட்டுத் தரிசாக விடப்பட்ட நிலத்தில் வேறுவகையான பயிர்களைப் பயிரிடுவதால், நிலமானது இழந்த மண் வளத்தினை மீண்டும் பெறும். இதனால் பயிரின் வளம் செழிக்கும் என்ற அறிவியல் செய்திகளைப் பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர். எனவே அறுவடை செய்த நிலத்தில் மாற்றுப் பயிராக அவரை அல்லது பருத்தி போன்ற பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். இதனை,

**பெரும் புனக் குறவன் சிறுதினை மறுகாற்**
**கொழுங்கொடி அவரை புக்கும் (குறுந் 82.)**

என்ற பாடல் மூலம் அறியலாம். இன்றும் விவசாயிகள் இந்த பயிர் சுழற்சி முறையினைப் பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## நிறைவுரை

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனம் செய்வோம் என்று பாரதி முழங்கிய கூற்று, சங்க காலத் தமிழரின் வாழ்வியலை அடியொற்றிக் கூறிய கூற்றாக இருக்கின்றது. உழவுத் தொழிலோடு பின்னிப்பிணைந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள். எனவே தான் உண்ண உணவும், உடுக்க உடையும், வசிக்க இருப்பிடமும் விவசாயத்தை அடிப்படையாக வைத்தே பெற்றுள்ளார்கள். இன்று தொழில் நுட்பத்தின் புதுமைகளுக்கு ஆட்பட்டுப் பயிர்த்தொழிலைப் பராமரிக்காமல் விட்டு விட்டதால் நாடு அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இதிலிருந்து மீள்வதற்கு இளைய தலைமுறையினர் விவசாயத்தைக் கல்வியாகக் கற்றிட முன்வர வேண்டும்.